

# வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**(வியாழன்தோறும்)**

| 15.09.2022 | 09. ‘வழிவிலகாத விசுவாசம்’ அவரவர் பொறுப்பு! |
|---|---|



தீமோத்தேயுவின் பாட்டி ‘லோவிசாளின்’ கணவர், விசுவாசி அல்ல! ஆகிலும் தன்னிடமுள்ள, விசுவாசத்தைக் காத்து நடந்ததுமல்லாமல், அதைத் தன் மகள் *ஐனிக்கேயாளுக்குள்* நிலைத்திருக்கச் செய்தாள் *லோவிசாள்* பாட்டி! அதுபோலவே, *ஐனிக்கேயாள்* கணவர் ஒரு புறஜாதி கிரேக்கர்! (அப்.16:1). ஆகிலும், கணவர் விசுவாசியாய் இல்லாத சூழ்நிலையிலும், “தன் விசுவாசத்திற்கு ஏற்பட்ட துன்பங்களைச் சகித்து” கணவரின் ‘கிரேக்க மார்க்கத்திற்கு’ *ஐனிக்கேயாள்* சென்றுவிடவில்லை! தன்னிடமுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்து, அந்த ‘மாயமற்ற விசுவாசத்தை’ மகன் தீமோத்தேயுவிடம் நிலைத்திருக்கச் செய்தாள் அவனின் தாய், ஐனிக்கேயாள்!

மாயமற்ற விசுவாசம் பெற்றவர்கள், தேவனுடைய பார்வைக்கு முன்பாக மாத்திரமே ஜீவிப்பார்கள்! *லோவிசாள் பாட்டி,* அவள் மகள் *ஐனிக்கேயாள்,* அவள் மகன் *தீமோத்தேயு* ஆகியோரின் விசுவாசம், யாதொரு சூழ்நிலையையும், யாதொரு நபரையும் சார்ந்திருக்கவில்லை!

எனவேதான், மாறுபட்ட தங்கள் வீட்டு சூழ்நிலைகளில், அவர்கள் தன் தன் விசுவாசத்தை விட்டு விலகவோ, இயேசுவை விட்டு தூரம் செல்லவோ, ஊழியத்தைக் கைவிடவோ, சபையிலிருந்து வழி விலகவோ இல்லை!

– ரத்னம்